**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**முதலாம் ஆண்டு கலைமாணிப் பரீட்சை –பருவம் – II - 2017/2018**

**PSC 1202 – இலங்கையின் அரசாங்கம் மற்றும் அரசியல் பற்றிய பார்வைகள்**

**இரண்டு (02) மணித்தியாலங்கள்**

நான்கு *(04)* வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

ஒவ்வொரு விடையும் ஆகக்கூடுதலாக பதினைந்து *(15)* புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

1. **ஒன்றில்**

அ) ‘மேற்கத்தைய காலனித்துவத்தின்’ பரிமாணத்துவத்தை எவ்வாறு அடையாளப்படுத்துவீர்? மற்றும் ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் மீதான அதன் தாக்கங்கள் எவை? சுருக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

**அல்லது**

ஆ) ‘காலனித்துவவாதம்’ என்ற பதத்தை வரையறை செய்து, எண்ணிக்கை ரீதியான பெரும்பான்மையினரை பின்நிறுத்தி சிறுபான்மையினரை நோக்கி வெளிக்காட்டப்பட்ட காலனித்துவக் கொள்கைகளின் சார்புத்துவ வாதம் இலங்கையின் இனத்துவ மோதலிற்கான ஓர் காரணியாக எவ்வாறு அடையாளப்படுத்தப்படுகிறது என்பது பற்றிக் கலந்துரையாடுக.

2. அ) இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் கீழான அரசியலமைப்புசார் மற்றும் பொருளாதாரம்சார் சீர்திருத்தங்களை சுருக்கமாகப் பரீட்சிக்குக.

ஆ) இத்தகைய மாற்றங்கள், இந்த நாட்டில் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் நிலைமாற்றங்களில் எவ்வாறு தாக்கம் செலுத்தின?

3. சோல்பரி அரசியலமைப்பு மாதிரியை அதனது பின்னணி, கட்டமைப்பு மற்றும் அரசியல் ரீதியான தாக்கங்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

**P.T.O**

4. **ஒன்றில்**

(அ) சுதந்திர இலங்கையில் அரசியல் வன்முறையின் செயன்முறைகளை அவற்றின் தோற்றம், இயல்பு மற்றும் செல்வாக்குகள் என்பவற்றை பிரதானமாக நோக்கி ஒப்பீட்டு ரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

**அல்லது**

(ஆ) "இலங்கையில் 1960 களின் ஆரம்ப காலப்பகுதி பொருளாதார மற்றும் சமூகக் கொள்கையில் ஒரு திருப்பு முனை ஏற்படுத்தியது ஆகும். நாடு ஓர் திறந்த பொருளாதாரத்தில் இருந்து ஓர் மூடிய பொருளாதாரத்திற்கு நகர்ந்ததுடன் அதன்பின்னர் நலன்புரி அரசுத்துவத்தை அணுகியது." இந்தக் கூற்றை விளக்குக.

5. இலங்கையின் அரசியலமைப்பு கட்டமைப்பானது வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியில் இருந்து ஒரு ஜனாதிபதித்துவ மாதிரிக்கு எவ்வாறு நிலைமாற்றம் பெற்றது; இந்த நிலைமாற்றம் இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியது என்பன பற்றி சுருக்கமாகக் கலந்துரையாடுக.

6. இலங்கையில் 1978 ம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழான நிறைவேற்று ஜனாதிபதித்துவத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

7. இலங்கையின் அரசியல் கட்சிகளில் காணப்படும் அண்மைக்காலப் போக்குகளையும் அவற்றின் பிரதான பிரச்சினைகளையும் சுருக்கமாகப் பரீட்சிக்குக.

8. பின்வருவனவற்றில் **இரண்டிற்கு (02)** குறிப்புகள் எழுதுக:

அ) 'குடியரசு' என்பதன் அர்த்தம்

ஆ) சோல்பரி அரசியலமைப்பின் கீழான இருமன்ற சட்டசபை

இ) 1957 ன் பண்டா-செல்வா உடன்படிக்கை

ஈ) 1978 ன் அரசியலமைப்பிற்கான 19 வது திருத்தம்

***************